மிக்க தலைமையின் கீழ் நமது பொறுப்புக்களைத் துணிவுடனும் கருணை உணர்வுடனும் அறிவுடனும் ஆர்வத்துடனும் நிறைவேற்றுவோம் என உறுதியாக நம்புகிறோம்.

218. இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட எனக்கு எல்லா வகையிலும் செம்மையான முறையில் உதவியையும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன் அவர்களுக்கும், அவருடன் இணைந்து இருந்து சிறந்த பணிகள் பலவற்றையும் ஆற்றிய நிதித் துறை மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த அதிகாரிகள், அலுவலாளர்கள் ஆகியோர்க்கும் என் உளங்கனிந்த நன்றியை உவகைப் பெருக்கோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

219. 1991—92 ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை மகிழ்வுடன் ஏற்றுக் கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் விழைந்து கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்

2. அரசினர் தீர்மானம்

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையை ஒத்திவைப்பதற்கான மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேரவை விதி 25 (1)—ன் கீழ் பேரவை இன்று ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 6—9—1991—ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்குக் கூடலாம்'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (ஆம்)

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 6—9—1991 வெள்ளிக்கிழமை முற்பகல் 9—30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 12—27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.